**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**முன்னிலை : திருமதி.A.சரண்யா, M.A., L.L.M., M.phil.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)**
**குமாரபாளையம்.**

**2023ம் ஆண்டு ஜூலை திங்கள் 25ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**REA.No.5/2023 in REP.No.5/2021 in OS.179/2011**

1. கோபால்
2. ரமேஷ்
3. சின்னதம்பி ... மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்

/எதிராக/

1. கொளந்தான் (இறந்தார்)
2. பாப்பாத்தி
3. கே.தவசியப்பன்
4. கே.கந்தசாமி ..எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இம்மனுவானது என் முன்பு 18.07.2023ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு,S.பழனிவேல், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சண்முகம், அவர்கள் ஆஜராகியும், உள்ளனர். மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 106–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>மனுதாரர்கள் தரப்பு மனு பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம்:</u>**

மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் இந்த மனுவை உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 106–ன் கீழ் தாக்கல் செய்து, 08.11.2022ம் தேதிய ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி ஏற்பட்ட 27 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக் கோரியுள்ளார். மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் தனது மனுவில், இந்த நிறைவேற்று மனுவில் மனுதாரருக்கே அவரது மகன்களுக்கோ எந்தவிதமான அறிவிப்பும் சார்வு செய்யப்படவில்லை. மேலும் இந்த நிறைவேற்ற மனுவிற்கான அசல் வழக்கில் மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு, 29.11.2019–ம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது நீதிமன்ற அமீனா வழக்கு சொத்தில் வரும்போது மட்டுமே மனுதாரருக்கு தெரிய வந்தது. இந்த நிறைவேற்ற மனுவிலும் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த நிறைவேற்ற மனுவில் பதிலுரை தாக்கல் செய்ய ஏற்பட்ட 27 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இந்த மனுவை அனுமதிக்க வேண்டியுள்ளார்.

**<u>2. 4–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் பதிலுரையையே 2, 3 எதிர்மனுதாரர்கள் தமதாக ஏற்றுக்கொள்ளும் பதிலுரையின் சுருக்கம் பின்வருமாறு:–</u>**

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் தங்களது பதிலுரையை தாக்கல் செய்துள்ளனர். அதில் இந்த நிறைவேற்று மனுவில் மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகளுக்கு முறையான அறிவிப்பு மற்றும் பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டது. அதனை மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் பெற்றுக்

கொள்ளாமல் திருப்பிவிட்டனர். இந்த நிலையில் இந்த எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் திருப்பப்பட்ட பதிவு தபால்களை உரிய குறிப்பாணையுடன் தாக்கல் செய்தும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரிண்மையால், நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவை ரத்து செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்பதால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்மனுதாரர்கள் தங்களது பதிலுரையில் கோரியுள்ளனர்.

**3.** இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே தீர்வு காணப்படவேண்டியுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனு, பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

5.1) வழக்கு கோப்புக்களையும் இருதரப்பு வாதுரைகளையும் இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலிக்கிறது. எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் அ.வ.எண்.179/2011 என்ற வழக்கை தாக்கல் செய்து, கடந்த 29.11.2019-ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனால் எதிர்மனுதாரர்கள் இந்த நிறைவேற்ற மனுவை தாக்கல் செய்து, சுவாதீனம் கோரியுள்ளார். மேற்படி நிறைவேற்று மனுவில், மனுதாரர்கள்/தீர்ப்புகடனாளிகள் பதிலுரை தாக்கல் செய்யாததால், சுவாதீன உத்தரவு வழங்கப்பட்டு, மனு சொத்தை சுவாதீனத்திற்கு நீதிமன்ற அமீனா சென்ற போது, எதிர்மனுதாரர் தடுத்ததால், மனுதாரர் காவலர் உதவி கோரி இடைநிலை மனு தாக்கல் செய்து, அது நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்து, நிறைவேற்ற மனுவில்

பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னிக்க வேண்டி, இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பது தீர்வு காண வேண்டியதாகும்.

5.2) மனுவை பரிசீலித்ததில், எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தாக்கல் செய்த நிறைவேற்ற மனுவில், மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜரிண்மையால், கடந்த 08.11.2022ம் தேதிய ஒருதலைபட்ச உத்தரவு இந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் மனு தாக்கல் செய்யவில்லை. மேலும் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரியே மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்புகளை பரிசீலித்ததில், அ.வ.எண்.179/2011 என்ற வழக்கு ஒருதலைபட்ச தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையின் படி நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்டதில், மேற்படி நிறைவேற்றுதல் மனுவிலும் மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் ஆஜராகாததால், ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு சுவாதீனத்திற்காக மனு சொத்திற்கு நீதிமன்ற அமீனா வரும் பொழுதே, மேற்படி விவரங்கள் தெரிய வந்துள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

5.3) ஆகவே இந்த மனுவை அனுமதிப்பதால் இந்த மனுதாரர்கள்/தீர்ப்புகடனாளிகளுக்கு இந்த நிறைவேற்று மனு சம்பந்தமாக தங்களது பதிலுரையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்த மனுவை அனுமதிக்காவிடில், அது இயற்கை நியதி (Natural justice) கோட்பாட்டிற்கு எதிரானது என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது. இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்களுக்கு எந்தவித அநீதியும் ஏற்படாது என்று இந்த நீதிமன்றம் கருதுவதால், நீதியின் நலன் கருதி இந்த மனு ரூ.1000/- செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மேற்படி

செலவு தொகையை எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்களுக்கு நேரடியாக செலுத்துமாறு உத்தரவிடப்படுகிறது. இல்லையென்றால் மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

அழைக்க 31.07.2023.

என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 25ம் நாள் ஜூலை மாதம் 2023ம் வருடம் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

A SARANYA Digitally signed by A SARANYA Date: 2023.07.25 14:05:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
குமாரபாளையம்

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சானறாவணங்கள்</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

இல்லை

A SARANYA Digitally signed by A SARANYA Date: 2023.07.25 14:05:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
குமாரபாளையம்

Fair/Draft/Order
REA.No.5/2023 in
EP.No.5/2021

Dated: 25.07.2023